DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 8 சின்னதுரை** |
| Father's Name | மாரி |
| Village | சிறுகடம்பூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 20/12/2024

**முதல் விசாரணை**

நான் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பம் **அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எழுதாத வெள்ளை தாளில் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினர். எதற்கு என்னிடம் கையொப்பம் வாங்கினர் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு அடுத்து எழுதாத வெள்ளை பேப்பரில் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( சாட்சியை செஞ்சி காவல் நிலைய தலைமை காவலர் 1952 திருமதி.கலையரசி என்பவர் அடையாளம் காண்பித்தார்)

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 18.01.2022ந் தேதி 21.15 மணியளவில் வசந்தபவன் எதிரில் நின்றுகொண்டிருந்தபோது செஞ்சி காவல் ஆய்வாளர் அவர்கள் மேல்களவாய்

கிராமத்தில் நடந்த சண்டை சம்மந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அதில் சம்மந்தபட்ட நபரான அபுபக்கர் என்பவரை கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும்படி என்னையும், தமிழ்செல்வன் என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் கேட்டதின்படி மேற்படி முதலாவது சாட்சி நானும், இரண்டாவது சாட்சி தமிழ்செல்வனம் ஒப்புதல் வாக்குமுலத்தில் கையெழுத்திட்டதாகவும், மேலும் மேல்களவாய் கிராமத்தை சேர்ந்த அபுபக்கர், அவர் தம்பி அமீர் பாஷா மீது முன்விரோதம் கொண்டு நானும், என் அண்ணன், சித்தப்பா, அவர் மகன் முகமது அலி ஆகியோருடன் சேர்ந்து அக்பர் மற்றும் அமீர்பாஷா என்பவரை அசிங்கமாக திட்டி இரும்பு பைப் மற்றும் ராடால் அடித்தது பற்றியும் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியது பற்றியும் அக்பர் மற்றும் அமீர்பாஷா ஆகியோர் அடித்து கொலைசெய்ய முயன்றது பற்றியும் வாக்குமூலம் கொடுத்தார் மேலும், அபுபக்கரை அழைத்துசென்றால் சம்பவத்தின்போது பயன்படுத்திய இரும்பு பைப் எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதின் பேரில் ஆய்வாளருடன் நானும், மேற்படி சின்னதுரை என்பவரும் மேல்களவாய் கிராமம் சென்று அபுபக்கர் வீட்டின் பின்புறம் அபுபக்கர் மறைத்து வைத்திருந்த இரும்பு பைப்பை கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், மேற்படி தமிழ்செல்வன் என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**